## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 232/2022 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | சிவசுப்பரமணியம் |
| Father Name | : | முத்துச்சாமி |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 48 |

Accused absent. Crpc 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28.10.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளகோவிலில் குடியிருந்து வருகிறேன். கடந்த 13.05.2022 ஆம் தேதியன்று காலை 10.45 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் கல் என் முன்னிலையில் போலீசார் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றியதாகும். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவமானது 13.05.2022 ஆம் தேதியன்று காலை 10.45 மணியளவில் நடைபெற்றது என்றால் சரிதான். பொன்னுச்சாமி என்பவர் சுப்பு என்பவரை கல்லை எடுத்து அடித்துவிட்டார். சுப்பு மற்றும் நாச்சி என்பவர்

பொன்னுச்சாமியின் தோட்டத்தில் வேலை செய்யும் நபர் ஆவார். பொன்னுச்சாமிதான் அடிப்பட்டவர்களை மருத்துவ சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இருக்கும்போது பொன்னுசாமி மற்றும் சுப்பன் ஆகியோர்கள் மட்டுமே இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. நான் சக்திவேலை பார்க்கவில்லை என்றால் சரிதான். சக்திவேல் என்பவர் அங்கு இல்லை. நான் தண்ணீர் பிடித்துவிட்டு சுமார் 11.45 மணியளவில் கிளம்பிவிட்டேன். போலீசார் 11.45 மணிக்கு சம்பவ இடம் வந்தார்கள். என்னுடன் யார் கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது. 2வதாக நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என் முன்னிலையில் எவ்வித சான்று பொருள்களும் போலீசார் கைப்பற்றவில்லை. நான் தண்ணீர் பிடிக்கும் தோட்டத்தின் உரிமையாளர் பொன்னுச்சாமி கேட்டுக்கொண்டதற்கு இணங்க வெள்ளகோவில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் எனது பெயர் விலாசத்தை மட்டும் போலீசார் கேட்டு எழுதிக்கொண்டார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI — Digitally signed by D THENMOZHI Date: 2025.10.28 19:14:35 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்